CHUNDIKULI BRANCH LIBRARY
MUNICIPAL COUNCIL
JAFFNA

## புதிய வடிவில் தூதரகங்கள் இலங்கை அரசின் திட்டம்

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களை விரைவில் புதிய இடங்களுக்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுத்துள்ளது இதன்பொருட்டு அந் நாடுகளில் புதிய காணிகள் கொள்வனவு செய்யப்பட திட்டமிடப்பட்டுள்ளது. அமைக்கப்படும் புதிய தூதரகங்கள் இலங்கை கட்டிடக் கலையை பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும் எனவும் தூதர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சிங்கப்பூர், பிரஸல்ஸ், சென்னை, லண்டன், நியூயோர்க், பாங்கொக், ரோக்கியோ ஆகிய நகரங்களில் புதிய தூதரகங்கள் அமைப்பது தொடர்பாக சாதகமான பதில் அரசுக்குக் கிடைத்துள்ளதாம். (ப1)

## கூட்டுறவுச் சங்கக் கிளையில் இரவு நேரம் கொள்ளை

அச்சுவேலி வலி கிழக்கு வட பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சிறுப்பிட்டி 14 ஆம் கிளையை கடந்த ஞாயிற்றுக்கிழமை உடைத்துப் பதினையாயிரத்துக்கு மேற்பட்ட பொருள்கள் திருடப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. இத்திருடர்கள் பாமா வகைகள், சவர்க்காரம், தீப்பெட்டி போன்ற பொருள்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகவும் தெரியவருகிறது இக் கிளையில் இரவுக் காவலாளியும் கடமையாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது. (33)

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 128 பிரமோதூத பங்குனி 21 ( 04-04-1991 ) வியாழன்

## அடுத்த யாழ் அரச அதிபர் யார்?

யாழ் மாவட்டத்தின் 50 ஆவது அரசாங்க அதிபர் பதவி திரிசங்கு நிலையில் இருப்பதாகப் பொது நிர்வாக உள்நாட்டு மாகாண சபைகள் அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தற்போதைய அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிறட் பதவி உயர்வு பெற்று இம்மாதம் 12 ஆம் திகதியுடன் கொழும்பு செல்லவுள்ளார். இதனை யடுத்து புதியவர் பதவி ஏற்கும் வரை மேலதிக அரசாங்க அதிபராக கடமையாற்றும் . க. சண்முகநாதன் பதில் அரசாங்க அதிபராகப் பணிபுரிவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது யாழ்ப்பாணத்தின் முதலாவது அரசாங்க அதிபராக ஆங்கிலேயரான பேர்சிவல் அக்லன்ட் டைக் (1829) என்பவர் பதவியேற்றார். அதன் பின்னர் ஆங்கிலேயர்களே தொடர்ந்தும் இப்பதவியை 1940 வரை வகித்து வந்தனர். 1940 ஆம் ஆண்டை அடுத்த காலப்பகுதியில் தமிழரான சி. சி. குமாரசாமி முதன் முதலாக இப்பதவிக்கு நியமிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (66)

# வடக்கே பொருள்களை அனுப்ப மறுக்கும் உயர் அதிகாரிகள்!

## கப்பலில் ஏற்றப்பட்ட இருதொகுதி மருந்துகள் இறக்கப்பட்டன

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் வடபகுதிக்கென ஒதுக்கிய பொருள்களை அனுப்புவதற்கு கொழும்பில் உள்ள உயர் அதிகாரிகள் குறுக்கே நிற்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சில வாரங்களில் வடக்கிலும் கிழக்கிலும் மோதல்கள் அதிகரித்து வருவது குறித்து சீற்றம்கொண்ட இவ்வதிகாரிகள் ஒதுக்கப்பட்ட பொருள்களின் அளவைக் குறைக்கவும், சில சந்தர்ப்பங்களில் முற்றாக நிறுத்தவும் ஆணை பிறப்பித்துள்ளனராம்.

வடபகுதி வைத்தியசாலைகளுக்கு மூன்று மாதத்திற்குரிய மருந்து வகைகள் முதலில் கப்பலில் ஏற்றப்பட்டதாகவும், திடீரென இரண்டு மாதத்திற்கான ஒதுக்கீடு இறக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது

இதேபோல யாழ் மாநகர சபைக்கு இரண்டு பரல் டீசல் வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டபோதும் திடீரென அது நிறுத்தப்பட்டது.

இதேசமயம் அரச சார்பு தொடர்பு சாதனங்கள் வடக்கு,கிழக்குப் பகுதிகளுக்கு போதுமான பொருள்கள் அனுப்பப்படுவதாக அடிக்கடி பிரசாரம் செய்வதுகுறிப்பிடத்தக்கது. (70)

## கட்டுத்துவக்கு வெடித்து காயம்

நேற்று முன்தினம் வவுனியா இருநெல்புர வாசியான க. துரைராஜா (34) என்பவர்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## ஊர்காவற்றுறையில் விமானக் குண்டுவீச்சு

நேற்றுக்காலை ஊர்காவற்றுறை பொன்னாச்சிக் கடைச் சந்தியில் பொம்பர் தாக்குதல் நடாத்தப்பட்டது. சில வீடுகள் சேதமடைந்தன.

இதேவேளை ஊர்காவற்றுறை முகாமில் இருந்து ஷெல் தாக்குதலும் நடாத்தப்பட்டது. செருக்கன், புளியங்கூடல் பகுதியில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. (ப- 17)

## மிதிவெடியில் காயம்

யாழ் முனியப்பர் கோவிலுக்கு நேற்றுப்பகல் சென்ற எம். வைத்திலிங்கம் என்பவர்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வெல்லாவெளியில் இராணுவம் மீது தாக்குதல்

மட்டக்களப்பிலுள்ள வெல்லாவெளி இராணுவ முகாமில் இருந்து கோவில் போரைதீவு நோக்கிச் சென்ற இராணுவத்தினர் மீது புன்னைக்குளம் எனும் இடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தினர்.

கடந்த திங்கள் காலை 10-15இற்கு இடம்பெற்ற இத் தாக்குதலில் இராணுவதரப்பில் ஏற்பட்ட சேதவிவரம் கிடைக்கவில்லை. புலிகள்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## முன்னாள் அமைச்சர் சுக்ளா காங்கிரஸ் கட்சிக்குத் தாவினார்

ஜனதாதள் (எஸ்) கட்சியின் தலைவரும் முன்னாள் இந்திய வெளியுறவு அமைச்சருமான வி. சி சுக்ளா நேற்று இந்திரா காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து கொண்டார்.

சமய சார்பற்ற ஜனநாயக சக்திகளை ஊக்குவிக்கும் முகமாகவே தாம் நிபந்தனையற்ற முறையில் இந்திரா காங்கிரஸில் சேர்வதாக அவர் குறிப்பிட்டார்.

## மின்சாரசபை ஊழியர்

# நீலங்காடு அரணில் இருந்து வெளியேறிய இராணுவம் மீது புலிகள் கடும் தாக்குதல்

## இராணுவ சடலங்கள் ஆயுதங்கள் மீட்பு

ஏ. கே. எல். எம். ஜி- 3, ரம் மகஸீன்- 6, 203 டொங்கான்

காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து கொண்டார்.

இரஸில் சேர்வதாக அவர் குறிப்பிட்டார்.

## மின்சாரசபை ஊழியர் தென்பகுதிக்கு இடமாற்றம்

புதுவருடத்திற்குப் பின்னர் வடபகுதி மின்சாரசபை ஊழியர்களில் ஒரு பகுதியினர் தென்பகுதிக்கு இடமாற்றம் பெற்றுச் செல்ல விருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்கள் வடகிழக்குப் பகுதிதவிர்ந்த ஏனைய இடங்களுக்கே இடமாற்றம் செய்யப்படவுள்ளதாகவும் தெரி

— 04 ஆம் பக்கம் பார்க்க

## க. பொ. த. உயர்தர பரீட்சை இம்மாதம் 22 ஆம் திகதி ஆரம்பம்

இம் மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க. பொ. த. உயர்தர விசேட பரீட்சைக்கு யாழ் மாவட்டத்தில் மொத்தம் 68 பரீட்சை நிலையங்களும் 10 இணைப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.

யாழ் மாவட்டத்தில் மொத்தம் 11031 பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்கு

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு பயணிகள் இடைவழியில் திரும்பினர்

கொழும்பு செல்வதற்காக வவுனியா புறப்பட்ட பலர் மீண்டும் இடைவழியில் திரும்பி யாழ்ப்பாணம் திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

வவுனியாப் பகுதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இராணுவ நடவடிக்கையை அடுத்தே இவர்கள் திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

கடந்த இரண்டு நாட்களாக

— 04 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவ சடலங்கள் ஆயுதங்கள் மீட்பு

நேற்றுப் பிற்பகல் 2. 30 மணியளவில் காரைநகர் நீலங்காடு அரணில் இருந்து பலகாட்டின் தென்புறமாக வெளியேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை நடாத்தினர்.

இம்மோதலின் போது சில சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகவும் பல இராணுவ ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம்மோதல்கள் 70 நிமிடங்கள் நீடித்தன. இதன்போது இரு பொம்மர்களும், வை- 8 விமானம், ஹெலி ஒன்றும் தாக்குதல் நடாத்தின.

இம்மோதலில் புலிகளால் மீட்கப்பட்ட ஆயுதங்கள்: ரி 56- 6, ரி 56 - 1, ரி81-2, ஏ. கே. எல். எம். ஜி- 2, ரம் மகஸின்- 6, 203 டொங்கான் பிஸ்டல்- 1, 203 டொங்கான் ஷெல்- 15, ஆர். பி. ஜி. ஷெல்- 3, ஏ. கே எல். எம். ஜி லிங்- 3, ஜி. பி எம். ரைபிள்- 1, 3 அங்குல மோட்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கீரிமலையில் ஷெல் வீச்சு

நேற்று முன்தினம் மாலை 3 30 மணியளவில் கீரிமலையில் வீடு பார்க்கச்சென்றோர் மீது இராணுவத்தினர் துப்பாக்கி வேட்டுக்களையும்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் பரவலாக புலிகள் - ராணுவம் மோதல்

வவுனியா மாவட்டத்திலுள்ள சூடுவைத்தபுலவு இராணுவமுகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் மீது புளித்தறித்த புளியங்குளத்தில் வைத்து விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தினர்.

இதேவேளை பாவளயூர் இராணுவமுகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் மீது மன்னார் வீதியிலுள்ள சாலம்பன் குளத்தில் வைத்து புலிகள் தாக்குதல் நடாத்தினர். இதேநேரம் இவர்களிற்கு உதவியாக 2 பொம்மர், 2 ஹெலி என்பனவும் தாக்குதலை நடத்தின.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவங்களின்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வசதிக்கட்டண ஆசிரியர் நியமனம் இல்லை

பாடசாலைகளில் ஏற்படும் ஆசிரிய வெற்றிடத்தை வசதி சேவைக்கட்டண நிதி உதவி பெறும் தற்காலிக ஆசிரியர்களைக் கொண்டு நிரப்புவது தடை செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கல்விச் சேவை ஆணைக்குழுச் செயலர் சகல பிராந்திய கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.


பாடசாலையில் ஏற்படும் ஆசிரிய வெற்றிடத்தை உள்ளக சேர்க்கை மூலம் நிரப்பிக் கொள்ளுமாறும் பணிக்கப்பட்டுள்ளது. (78)

## திருமலை கடலில் சென்ற சிங்கள மீனவர் மீது தாக்குதல்

நேற்று முன்தினம் திருகோணமலை கடலில் மீன்பிடிக்கச்சென்ற பல சிங்கள மீனவர்கள் தாக்கப் பட்டுள்ளனர். இதில் சில மீனவர்கள் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் நேற்று பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

— 04 ஆம் பக்கம் பார்க்க

# ஷப்றாவுக்கு எமது வாழ்த்துக்கள்



உங்களது புதிய தலைமை அலுவலக
கட்டிடத் திறப்புவிழா அழைப்பிதழ் கிடைக்கப்பெற்றோம்

மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டுத் திறம்பட நீங்கள் மக்களுக்குச் சேவையாற்றிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் சகல வசதிகளும்கொண்ட உங்களது சொந்த அலுவலகக் கட்டிடத்தில் இயங்க இருப்பது வாடிக்கையாளர்களுக்கு மேலும் சிறப்பான முறையில் செயலாற்றவழிவகுக்கும் என்ற எமது உறுதியான நம்பிக்கையில் "ஷப்றா" வின் சேவை தொடர்ந்து மக்கள் பெற அந்நிறுவனம் மென்மேலும் வளர வாழ்த்துகிறோம்

**வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி,**
**474, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

04012


## இராமகிருஷ்ணாலய கிளை திறப்புவிழா

இராமகிருஷ்ணாலய நுண் கலைக் கல்லூரி கிளைத் திறப்புவிழா 6 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 30 மணிக்குத் தாவடி வடக்கில் இடம்பெறவுள்ளது.

## ஜெயந்தி விழா

சுவாமி சாந்தானந்தா ஜெயந்தி தினவிழாவும், இராமகிருஷ்ணாலய நுண் கலைக் கல்லூரியின் 3 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் திருநெல்வேலி வடக்கில் 7 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

## புதிய வைத்திய அதிகாரி

முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி எஸ். சுந்தரலிங்கம் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியாக இம்மாதம் தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (13)


உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான பிரமோத ஆண்டு பங்குனி மீ 23 ஆம் நாள் (06 - 04 - 1991)
சனிக்கிழமை பிற்பகல் 1. 30 - 2. 00 மணிவரையுள்ள சுபவேளையில்

திரு சி. இரத்தின சுவாமி அவர்களின்
சிரேஷ்ட புதல்வன்
திருநிலைற செல்வன்
**முத்துரமணிதரன்**
(Diploma in Food Dairy Technology Lon.
உற்பத்தி நிலையப் பொறுப்பாளர்
பரிசோதனைப் பிரிவு, பனை அபிவிருத்திச்
சபை, யாழ்ப்பாணம்)
அவர்களுக்கும்

பிரசித்த நொத்தாரிஸ்
திரு திருமதி வ சின்னையா தம்பதிகளின்
கனிஷ்ட புதல்வி
திருநிறைசெல்வி
**சுமங்களராணி**
(B. com) பட்டதாரி ஆசிரியை மன்னார்
அ. ம. வி )
அவர்களுக்கும்

மணமகளில்லத்தில் நடைபெறும் திருமணவிழாவிலும் பெரியோர் ஆசியிலும் வாழ்த்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.

(இரு வீட்டாரின் அழைப்பு)

தங்கள் நல்வரவை நாடும்

திரு. சி. இரத்தினசுவாமி
குடும்பத்தினர்
"முத்து பவனம்"
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

திரு. திருமதி வ. சின்னையா
(பிரசித்த நொத்தாரிஸ்)
குடும்பத்தினர்
"சிவபதி" சங்கத்தானை
சாவகச்சேரி.

(தனிப்பட்ட அழைப்புகள் இல்லை)

04010


* * *


மில்க்வைற் MWS MILKWHITE

மிக்க சக்தி கொண்ட
அடிக்கட்டு உரமாகவும்,
பூச்சி கொல்லியாகவும்
பயனளிப்பது

## நீமியா உரம்

இணுவில், திருநெல்வேலி, யாழ்நகர் அண்ணா கோப்பி கடைகளிலும் விற்பனையாகிறது.

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்.**

04014


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

வீர ஜனனம்
14
—
06
—
1973



வீர மரணம்
06
—
03
—
1991


## சகாய விற்பனை

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில்
முறைசாராக் கல்விப் பிரிவுக் கண்காட்சியில்

எதிர்வரும் 4ஆம், 5ஆம் தேதி வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை மில்க்வைற் சகாய விற்பனை அரைப் போத்தல் திரவ சவர்க்காரம் (LIQUID SOAP) ஒலிவ் இநாளைப் பவுடர் பக்கெற் ஒன்று, கீரைவிதை, கரிசலாங்கண்ணி பொலித்தீன் பை.

ரூ. 50.00 மட்டுமே.

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்**

04013


## 45 ஆம் நாள் நினைவு அஞ்சலி

# 45 ஆம் நாள் நினைவு அஞ்சலி

அன்னையின்
மடியில்

16 - 11 - 1974

ஆண்டவன்
அடியில்

21 - 02 1991



## தியாகராசா அகிலன்

"மாதங்கள் உருண்டோடி வருடமாய் மாறிடினும்
மாறாதே எம் சோகம் உமை விட்டென்றுமே"

குறிப்பு: 21. 02. 1991 இல் அகால மரணமடைந்த தியாகராசா அகிலனின் ஆத்ம சாந்தி வைபவம் அன்னாரின் இல்லத்தில் 06.04.1991 சனிக்கிழமை நண்பகல் நடைபெறவுள்ளது. அவ் வைபவத்தில் கலந்து சிறப்பிக்கும்படி உற்றார், உறவினர், நண்பர்களை வேண்டிக் கொள்கின்றோம்.

நீர்வேலி மத்தி
நீர்வேலி.
06. 04. 1991

உமது பிரிவால் வாடும்
குடும்பத்தார்.

04009

---



1973 — 1991

வீரவேங்கை "ஜீவா"

## ஜெயகுமார் நிர்மலகுமார்

(காஞ்சியப்பாவின் பேரன்)

அந்தியேட்டிக் கிரியை நாளை 05. 04 91 வெள்ளிக்கிழமை மயிலியதனை இல்லத்தில் நடைபெறும்

பிஞ்சும் இங்கே கனியாகி
பின்னர் அது விதையாகும்

நெஞ்சத்தின் மையத்தில்
நீ வைத்த காயத்தில்
செங்குருதி பாய
சிந்துவதும் கண்ணீரோ!
அஞ்சுவதும் தவறென
அடிமனதின் பேரொளியாய்,
அங்கும் இங்கும் பரந்த
அன்புச் சுடர் அணைந்ததன்றோ!
வஞ்சமின்றி மலரும்
வாய்முத்து அழகும்,
தந்த தென்றல் சுகமென
நினைவினை மீட்டுகின்றோம்
பிஞ்சும் இங்கே கனியாகும்
பேர் கொண்ட மண்ணின் விதையாகும்
என்று சொன்ன நிர்மலனை
எண்ணியே நெஞ்சம் தேற்றுகின்றோம்

மயிலியதனை,
தொண்டைமானாறு,
வல்வெட்டித்துறை.

பெற்றார், குடும்பத்தினர்,
உறவினர்கள், நண்பர்கள்.

04006

---


# சிவசாயி சித்திர கோட்டமும் சிற்பசாலையும்

(கலாசார அமைச்சின் அங்கீகாரம் பெற்றது)

நான்கு ஆண்டு முழுநேர டிப்ளோமா பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்: க. பொ. த. (சா. த.) பத்திரப் பரீட்சையில் சித்திரம் உட்பட 6 பாடங்களில் சித்தி.

வயதெல்லை: 24 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: 21 04.1991.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி;

அதிபர்,
சிவசாயி சித்திரகோட்டம் — சிற்பசாலை
225, கோயில் வீதி,
நல்லூர்.

04011


04013

# வெளிநாடுகட்கான விமான ஆசனப்பதிவுகளை
# யாழ்ப்பாணத்திலேயே மேற்கொள்ள ஏற்பாடு

வெளிநாடுகளுக்கான விமானப்பதிவுகளை யாழ்ப்பாணத்திலேயே மேற்கொள்ளக் கூடிய வசதி இலங்கை வங்கியின் யாழ் கிளையில் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இலங்கை வங்கி புதிதாக அறிமுகப்படுத்தித் தற்பொழுது கொழும்பில் நடைமுறைப்படுத்தப்படும் விசேட திட்டத்திற்கமையவே இந்த ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

அத்துடன் வெளிநாட்டுச் செலவாணி, பிரயாணக் காசோலை, ஹோட்டல்களில் அறை ஒதுக்குதல், பிரயாண மாற்று ஒழுங்குகள் மற்றும் விபத்து- காப்புறுதிச் சேவைகளும்யாழ் இலங்கை வங்கிக் கிளையினூடாக மேற்கொள்ளப்படவுள்ளன.

இம்மாத நடுப்பகுதியிலிருந்து இச்சேவைகளைமேற்கொள்ள முயற்சி எடுக்கப்படுவதாக இலங்கைவங்கியின் யாழ் பிராந்திய நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

(ப- 11, 70, 74)

## இந்திய சரக்குக் கப்பலில் குண்டு நடுக்கடலில் வெடித்தது

தமிழ்நாடு கடலூர் கடற்கரைக்கு 240 கிலோ மீற்றர் தொலைவில் இந்திய சரக்குக் கப்பல் ஒன்றில் குண்டுவெடிப்புச் சம்பவம் நடந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இக்குண்டு வெடிப்பினால் பொறியியலாளர் ஒருவர் உட்பட மூன்று கப்பல் ஊழியர்கள் படுகாயமுற்றுள்ளனர். அக் கடல் பகுதியில் பயணத்தை மேற்கொண்டிருந்த ரஷ்ய கப்பல் ஒன்று உடன் உதவிக்கு விரைந்து காயமடைந்தவர்களை ஏற்றிக்கொண்டு சென்னைத் துறைமுகத்தை நோக்கி விரைந்து கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

குண்டு வெடித்த சரக்குக் கப்பல் செயலற்று விட்டதாகவும், இரு இந்தியக் கடற் படைக் கப்பல்கள் விபத்துக்கு விரைந்து கொண்டிருப்பதாகவும் ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## யாழ் மருந்துக் கலவையாளர்களின் மேலதிகநேரப் படி நிறுத்தம்

யாழ் சுகாதாரத் திணைக்களத்தில் கடமையாற்றும் மருந்துக்கலவையாளர்களுக்கு வழங்கப்படாதிருக்கும் மேலதிக வேலைக்கான வேதனத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறுயாழ் பிரதேசசுகாதாரசேவைப் பணிப்பாளரை அரசாங்க மருந்துக்கலவையாளர்கள் சங்க யாழ் கிளை கோரியுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் முதல் இக் கொடுப்பனவை யாழ் சுகாதாரத் திணைக்களம் நிறுத்தியிருந்தது

நாட்டின் ஏனைய பிராந்தியங்களில் மருந்துக் கலவையாளர்களுக்கு இக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (13)

## பெண்களின் பிறப்பு வீதம் இந்தியாவில் குறைகிறது

இந்தியாவில் பெண் பிள்ளைகளின் பிறப்பு வீதம் குறைந்து வருவது சமீபத்திய புள்ளிவிபரக் கணக்கெடுப்பின் மூலம் அறியப்பட்டுள்ளது.

இந்தியாவில் கடந்த 10 ஆண்டுகளில் சனத்தொகை 16 கோடியினால் அதிகரித்துள்ளது. இந்த அதிகரித்த தொகையே யப்பான் தேசத்தின் தற்போதைய சனத்தொகையாகும் தற்போது இந்தியாவின் சனத்தொகை சுமார் 85 கோடியாகும்.

இவ்வருடம் பெப்ரவரி மாதம் நடாத்தப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி தமிழகத்தின் சனத்தொகை ஐந்தரைக் கோடியைத் தாண்டியுள்ளது. தமிழகத்தில் உள்ள மாவட்டங்களில் தென்னார்க்காடு மாவட்டத்திலேயே அதிக சனத்தொகையுள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது. இரண்டாமிடத்தை செங்கை அண்ணா மாவட்டமும் மூன்றாமிடத்தை தஞ்சாவூர் மாவட்டமும் பெறுகின்றன. நீலகிரி மாவட்டத்திலேயே மிகவும் குறைவான மக்கள் வாழ்வதாகவும் புள்ளி விபரக் கணிப்பீட்டில் இருந்து தெரியவந்துள்ளது.

## தொழில் நுட்ப கண்காட்சி

இன்று காலை 9 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் மருதனார்மடக் கல்விக்கோட்டத்திற்கான தொழில் நுட்ப உபவள நிலையத் திறப்பு விழாவும் கைப்பணிப் பொருட்கண்காட்சியும்இடம்பெறவுள்ளது.

இப் பொருட்காட்சியில் இப்பகுதி முறைசாராக்கல்வி மாணவர்களது உள்ளூர்ப் பொருட்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட பல கைப் பணிப் பொருட்களும், ஓவியங்களும், மனையியல் நெறித் தயாரிப்புகளும். பத்திரிகைக் கண்காட்சியும் இடம்பெறுகின்றது (ப10)

## இறுதிப்போட்டி மீண்டும் நடக்கும்

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகத்தினால் கடந்த 28 ஆம் திகதி நடாத்தப்பட்ட தாச்சி இறுதிப் போட்டி முடிவுகள்ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் இறுதிப் போட்டி மீண்டும் நடாத்தப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இறுதிப் போட்டியில் சுதுமலை நாவலர் கழகமும் பண்டத்தரிப்பு சாந்த விநாயகர் கழகமும் மோதவுள்ளன. (16)

## கருத்தரங்கு ஒத்திவைப்பு

யாழ் பல்கலைக்கழக மெய்யியல் கழகத்தினரால் இன்று வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு தொல் பொருளியல் மண்டபத்தில் நடாத்த ஏற்...

## வடக்கிற்கான பல்கலைக்கழகக் கல்லூரி
## வவுனியா காமினிசிங்களப் பாடசாலையில்

வடபகுதிக்கான பல்கலைக்கழகக் கல்லூரிகளில் ஒன்று வவுனியாவில் நிறுவப்படவுள்ளது.

வவுனியாவிலுள்ள காமினி சிங்கள மகாவித்தியாலயத்திலேயே இந்த பல்கலைக்கழகக்கல்லூரி அமைக்கப்படவுள்ளது.

## திரிபோஷாவுக்கு பதிலாக 'ஜீவாகாரம்'

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள சகல சிறுவர் நல சிகிச்சை நிலையங்களிலும் 'திரிபோஷா' மாவுக்கு பதிலாக உள்ளூரில் தயாரிக்கப்பட்ட 'ஜீவாகாரம்' மா பக்கற் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

சிறுவர் நல கிளினிக்குகளில் போஷாக்கு குறைந்த - நிறை குறைவான குழந்தைப்பிள்ளைகளுக்கு இந்த ஜீவாகாரம் மா பக்கற் வழங்கப்படுகின்றது. (13)

## கேரதீவு குண்டு வீச்சால் பாதை சேதம்
## பயணிகள் கடலில் குதித்துத் தப்பினர்

## போராட்டம் இடைநிறுத்தம்

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலைகலாசாரப் பிரிவினர் கோலாகலமான முத்தமிழ்விழா ஒன்றை ஏற்பாடு செய்துவரும் இக்கட்டத்தில், ஈழத்தில் முன்பு நடந்த தமிழ் விழாக்களின் வரலாறு இளைய தலைமுறையின் நலன் கருதி இங்கு தரப்படுகிறது.

## எழுச்சி தந்த ஈழத்துத் தமிழ் விழாக்கள்

''ஆடுவமே பள்ளுப் பாடுவமே தமிழ்
ஆட்சியின் மாட்சியில் கூடுவமே''

என்று பாவேந்தர் பாரதிதாசன் தமிழ் ஆட்சியையும் தமிழர் மாட்சியையும் மனம் இனிக்க நா இனிக்கப் பாடிப் பரவசமானார், 'மொழி வாழ இனம் வாழும்' என்று கனவு கண்டவர் அந்தக் கவிக்கோமான். மொழியோடு பண்பாடும் அவற்றைப் போற்றிக் காத்திட ஒரு நாடும் வேண்டிப் போராடும் இந்த நாளிலே, பத்து நாள் முத்தமிழ் விழா எடுத்துத் தூங்கும் தமிழ் மகனைத் 'தூங்காதே தம்பி தூங்காதே' என்று துயில் எழுப்பிட முன் வந்தோரைப் பாராட்டி, இந்த மண்ணில் நிகழ்ந்த மாபெரும், தமிழ் விழாக்களை நினைவு கூர்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

### இலங்கைத் தமிழ்விழா

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டி 1951 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் 'இலங்கைத் தமிழ் விழா' என்ற பெயரில் பெருவிழா ஒன்று திருநெல்வேலி பரமேசுவரக் கல்லூரி (இந் நாள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) மைதானத்தில் நிகழ்ந்தது. மூன்று நாள்கள் யாழ்ப்பாணம் முழுவதுமே விழாக்கோலம் பூண்டு விளங்கியது. முன் எப்பொழுதும் கண்டிராத மாபெரும் பந்தல் அமைத்து, வண்ணார் பண்ணைச் சிவன் கோயிலிலிருந்து எழுச்சி ஊர்வலம் ஒன்றினை ஏற்பாடு செய்து, ஈழத்துத் தமிழ் அறிஞர்களையும் தமிழகத்தின் நல்லறிஞர்களையும் ஒன்று கூட்டி, நடந்த அரும் பெரும் விழா அது.

'என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'

என்னும் திருமந்திரத் திருவாக்கினைத் தமது முத்தாய்ப்பாக வைத்துத்தமிழ்த்தூதர் தனிநாயகஅடிகள் தமிழ்முழக்கம் செய்த விழாஇது. எங்கள் தமிழ் மொழி மதங்கடந்த இனங்கடந்த உலகமொழி என்ற உண்மை அன்று அவர் வாக்கில் அமைந்து தமிழரை வீறுகொள்ள வைத்தது. ஆங்கிலமே பேசி, விஞ்ஞானத் துறையிலேயே திளைத்தாடிப் பிரித்தானிய அரசவைக் கழக உறுப்பினராய் விளங்கிய விஞ்ஞானி கிருஷ்ணன் மழலைத் தமிழ் பேசி எல்லாம் தமிழில் இயலும் என்று எடுத்துக் காட்டியதும் இவ்விழாவிலே தான்.

### ஈழமும், தமிழகமும் இணைந்து...

சொல்லின் செல்வர் ரா. பி சேதுப்பிள்ளை, பேராசிரியர் மு. வரதராசன் முதலாம் தமிழகப் பேரறிஞர்களும், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, புலவர் மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை முதலாம் ஈழத்து மூதறிஞர்களும் உரையாற்றித் தமிழின் பெருமையை, இலக்கிய வளத்தினையெல்லாம் வாரி வழங்கிய விழாவும் அதுவே. சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தோடு இணைந்து அதன் செயலாளர் 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தியும், ஈழத்து வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் ச. அம்பிகைபாகனும் இணைச் செயலர்களாய்த் திறம்பட இயங்கி, விழாவின் வெற்றிக்குப் பெரிதும் உழைத்தனர். கலைப்புலவர் க. நவரத்தினம் மூதறிஞர் சு. நடேசபிள்ளை (தலைவர்) முதலாம் திறமையாளரின் அணுக்கத் துணையும் இவ்விழா சிறக்க உதவியது.

### மலரும் மலர்ந்து...

இயற்றமிழோடு இசைத்தமிழும் இசைந்தது என்பதற்கு இசைவாணி எம். எல் வசந்தகுமாரியின் இசைக் கச்சேரியும் எடுத்துக் காட்டாயிற்று. நால்காம் தமிழ் விழாவாய் நடைபெற்ற இதனை நினைவில் நிறுத்துமுகமாக 'இலங்கைத் தமிழ் விழா மலர்' வெளியிடப்பட்டது.

வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு தொல்பொருளியல் மண்டபத்தில் நடாத்த ஏற்பாடாகியிருந்த 'சுயாதீன சித்தமும் சைவசித்தாந்தமும்' எனும் தலைப்பிலான கருத்தரங்கு பிற்போடப் பட்டுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தொல்பொருளியல் மண்டபத்தில் இக்கருத்தரங்கு இடம்பெறும். யாழ் பல்கலைக் கழக மெய்யியல் கழகத் தலைவர் அ. யூட் அஞ்சலோ அறிவித்துள்ளார்.

## கேரதீவு குண்டு வீச்சால் பாதை சேதம் பயணிகள் கடலில் குதித்துத் தப்பினர்

நேற்று முன்தினம் மாலை கேரதீவு துறையில் மூன்று பொம்மர்கள் நடாத்திய குண்டுத் தாக்குதலினால் ஐந்து பயணிகள் சிறுகாயமடைந்தனர். பல பயணிகள் கடலில் குதித்து உயிர் தப்பினர்.

அத்துடன் இருபத்திஐந்து சைக்கிள் வண்டிகளும், ஏழு மோட்டார் சைக்கிள்களும் சேதமடைந்தன.

இக்குண்டு வீச்சினால் கேரதீவு - சங்குப்பிட்டி மார்க்கத்தில் சேவையிலீடுபடுத்தப் பட்டுவந்த கடற் பாதையும் சேதமடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்புதிய பாதை சிலமாதங்களுக்கு முன்னரும் குண்டு வீச்சுக்கு இலக்காகி சேதமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (74)

## போராட்டம் இடைநிறுத்தம்

கடந்த சில தினங்களாக தெற்கில் வங்கி ஊழியர்கள் மேற்கொண்டு வந்த சட்டப்படி வேலைசெய்யும் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப் பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கை வங்கி ஊழியர் சங்கம் மற்றும் வங்கிகளின் லிகிதர்கள் சங்கங்கள் என்பன இந்தப் போராட்டத்தில் கடந்த முதலாம் திகதி முதல் ஈடுபட்டிருந்தன.

## மட்டு. மாவட்டத்தில் விதவைகளாவோர் தொகை அதிகரிப்பு!

## கைதானோருக்கு அந்தியேட்டி செய்யச் சொல்கிறது இராணுவம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் விதவைகளாக்கப்பட்ட பெண்களின் தொகை கடந்த சில மாதங்களில் பெருமளவு அதிகரித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அப்பகுதியில் பாதிக்கப்பட்டோருக்கான உதவி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சில தொண்டர் ஸ்தாபனங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் எழுபது வீதமான பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளதாகக் கணித்துள்ளன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அப்பகுதியில் இராணுவத்தினரினாலும் மற்றும் தமிழ், முஸ்லிம் குழுக்களினாலும் தமிழ்க் குடும்பஸ்தர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் காணாமல் போகும் சம்பவங்கள் தொடர்ந்து வருவதினாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு அரசடி மகாவித்தியாலய அகதிமுகாமில் தங்கியிருந்து பின்னர் யாழ் திரும்பிய ஒருவர் இது பற்றிக் குறிப்பிடுகையில் அங்குள்ள அகதிமுகாம்களில் அடிக்கடி குடும்பஸ்தர்கள் கைது செய்யப்படுவதாகவும், பின்னர் அவர்களின் நிலை பற்றி விசாரித்தால் அந்தியேட்டிக் கிரியைகளைச் செய்யுங்கள் எனக் கூறி இராணுவத்தினர் கையை விரித்து விடுவதாகவும் தெரிவித்தார்.

(74)

எடுத்துக் காட்டாயிற்று. நான்காம் தமிழ் விழாவாய் நடைபெற்ற இதனை நினைவில் நிறுத்துமுகமாக 'இலங்கைத் தமிழ் விழா மலர்' வெளியிடப்பட்டது.

### குறிக்கோள் நிறைவேறி...

''மொழியினை வளம்படுத்தினால் மட்டும் போதாது. மொழிக்குரிய மக்களனைவரும் மதம், அரசியல் முதலிய காரணங்களினால் தம்மிடையே எத்தனை வேற்றுமை உடையோராய் இருப்பினும் மொழியினை வளர்க்கும் உயர்ந்த குறிக்கோளைப் பொறுத்த அளவில் - ஒற்றுமையும், ஒத்துழைப்பும் மிக்கோராய் விளங்கல் வேண்டும்'' என்ற சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகக் குறிக்கோளை 'இலங்கைத் தமிழ் விழா' நன்முறையில் நிறைவேற்றி வைத்தது.

தமிழ் மொழி, அது பேசப்படும் நிலங்களில் மட்டும் கட்டுக் கிடையாகத் தேங்கியிராது, உலகப் பெருமொழியாகவும் உலாவருதல் வேண்டும் என்ற உண்மை இவ்விழாவினைத் தொடர்ந்து தமிழறிஞர் உள்ளங்களிலே மூகிழ்த்தது.

''திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்''

என்ற மகாகவி பாரதியின் வாக்கினை உயிர்ப்புடையதாய் ஆக்க முனைந்த முன்னோடியாக இவ்வறிஞர் வரிசையிலே முன்னின்றவர் ஈழத்தமிழ் மகனாராகிய தமிழ்த் தூதர் தனிநாயக அடிகளார் தாம் என்பது எமக்குப் பெருமை தருவதாகும்.

### உலகத் தமிழாராய்ச்சிக் கழக உதயம்

''சங்க இலக்கியத்திற் கூறிய 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் கொள்கையையும், இந்த நூற்றாண்டில் பாரதியார் கூறிய ''திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்'' எனுங் கோட்பாட்டையும் அடிப்படைக் கொள்கையாகக் கொண்டு ''உலகத் தமிழாராய்ச்சிக் கழகம்'' நிறுவப்பட்டது.

(வளரும்)

ஒய்வூதியம் வழங்க

## கிராமிய வங்கிகளுக்கு இலங்கை வங்கி உதவும்

யாழ் மாவட்டத்திலுள்ள கிராமிய வங்கிகளில் ஒய்வூதியம் பெறுபவர்களுக்குத் தேவையான பணத்தை இலங்கை வங்கியில் இருந்து பெற்றுக்கொடுக்க யாழ் அரச அதிபர் அன்ரன் அல்பிரட் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மக்கள் வங்கியிடம் இருந்து போதியளவு பணம் கிடைக்காததால் கிராமிய வங்கிகளில் ஒய்வூதியருக்கு கொடுப்பனவுகளை வழங்க முடியாதிருப்பதனால் காசோலைகளையே வழங்குவதாகவும் இதனால் பென்சனியர்கள் கமிசன் கொடுத்தே இவற்றை பணமாக்க முடிவதாகவும் பலநோ.கூ. சங்கத் தலைவர்களால் அரச அதிபருக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை பலநோ.கூ. சங்கங்கள் மக்கள் வங்கியில் மட்டுமே கணக்குகளை வைத்திருக்க முடியும் என்ற சட்ட நியதியொன்று இருப்பதால் இலங்கை வங்கியில் இருந்து பணத்தை மக்கள் வங்கிக்கு மாற்றி கிராமிய வங்கிகளுக்கு வழங்க முடியும் எனவும் கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (66)

## கூட்டுறவுச்சங்கத் தலைவர்கள் அரச அதிபர் பேச்சு

குடா நாட்டிலுள்ள பல. நோ. கூ. சங்கங்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் உலர் உணவு நிவாரண நடவடிக்கைகள் மற்றும் அத்தியாவசிய சேவைகள் பாதிக்கப்படாத முறையில் தீர்வுகளைக்காண யாழ் அரச அதிபர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

யாழ் கூட்டுறவு சபைத் தலைவர் சி. சிவமகாராசா தலைமையிலான பலநோ கூ சங்கத் தலைவர்களைக் கொண்ட குழுவொன்று நேற்று அரச அதிபரைச் சந்தித்து கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி எடுத்துக் கூறிய போதே இவ் இணக்கம் காணப்பட்டது.

உலர் உணவுப் பொருட்களை களஞ்சியங்களுக்கு ஏற்றி இறக்கிய செலவினங்கள் சங்கங்களின் சொந்த இருப்பில் இருந்து நிவாரண நடவடிக்கைகளுக்கு பொருட்களை வழங்கியமை போன்றவற்றால் பெரும் தொகைப் பணத்தை செயலகம் வழங்க வேண்டியுள்ளது தொடர்பாகவும் மற்றும் சேவைகள் பற்றியும் பேச்சுக்கள் நடத்தப்பட்டன. (66)

பருத்தித்துறை இலங்கை வங்கியில்

## நிவாரணம் பெறாதவர்களுக்கு சனிக்கிழமை இறுதிச் சந்தர்ப்பம்

பருத்தித்துறை இலங்கை வங்கியில் இம்மாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை, பட்டியலில்இடம்பெற்றும் நிவாரணத்தைப் பெறத் தவறிய 693 குடும்பங்களுக்கு மீளக் குடியமர்த்தல் நிவாரணம் 1000 ரூபாவும் 350 குடும்பங்களுக்கு சுயதொழில் பாதிப்பு நிவாரணம் 4000 ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவிலும் வடமராட்சி வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் உள்ள சகல கிராம சேவை அலுவலர் பிரிவுகளிலும் பட்டியலில் இடம்பெற்ற இதுவரை நிவாரணத்தைப் பெறத் தவறியவர்களுக்கு இறுதிச் சந்தர்ப்பமாக இக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன என்றும் வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (15)

---

### மிதிவெடியில...

அப்பகுதியிலிருந்த மிதிவெடி வெடித்ததில் பலத்த காயமடைந்து யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (70)

### வவுனியா...

போது இராணுவ தரப்பில் மூவர் கொல்லப்பட்டனர்.

சாலம்பன் குளத்தில் நடந்த தாக்குதலில் புலிகள் தரப்பில் பஞ்ஜித் (ரமேஷ்-றொபேட், செட்டிக்குளம், வவுனியா) வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார். (71

---

# வடக்கு, கிழக்குப்பகுதி அரச வங்கிகளில் ஊழியர் பற்றாக்குறை நிலவுகிறது

வடக்கு கிழக்குப் பகுதிகளில் உள்ள அரச வங்கிகளில் ஊழியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

1983 ஆம் ஆண்டுக்குப் பின் பல ஊழியர்கள் வெளிநாடுகள் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு யுத்தம் ஆரம்பித்ததையடுத்து மேலும் பல ஊழியர்கள் வெளிநாடுகள் சென்றுள்ளதாகவும் வங்கி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனால் தற்போது ஒருவர் செய்யும் வேலைகளை மற்றொரு உத்தியோகத்தர் செய்ய வேண்டியிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன

இந்த நிலைமைகள் குறித்து கொழும்பு தலைமை அலுவலகங்களுக்கு பல தடவைகள் கோரிக்கை விடப்பட்டும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இதனால் தமிழ்ப்பகுதி வங்கிகளில் வாடிக்கையாளர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதுடன், வங்கியின் கருமங்களும் தாமதமாகின்றன.

இதே சமயம் 1989 இல் வடக்கு, கிழக்குப்பகுதி தேசிய சேமிப்பு வங்கிகளுக்கு ஆட்சேர்ப்பு குறித்து விளம்பரங்களும் அரச சார்புள்ள பத்திரிகையில் வெளியாகி பலர் விண்ணப்பங்களை அனுப்பியும் இதுவரை அது தொடர்பான நேர்முகப்பரீட்சை நடைபெறவில்லை.

இதேபோல கொழும்பு பத்திரிகைகளில் வங்கிகளில் உள்ள சில பதவிகளுக்கு அடிக்கடி விண்ணப்பங்கள் கோரப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (ப 11

## கிழக்குப் பகுதி மாணவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா உதவி

யாழ் பல்கலைக்கழக தென் தமிழீழ மாணவர்களுக்கு அரசசார்பற்ற நிறுவனங்களின் சம்மேளனம் 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளதாக யாழ் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன

இப் பணத்தினைக் கொண்டு மாணவர்களுக்கு மண்ணெண்ணெய் மற்றும் உபகரணப் பொருட்களும் வாங்கிக் கொடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

தொண்டர் ஸ்தாபனங்களின் உதவியாலேயே இவர்களின் பிரச்சினைகள் ஓரளவு தீர்க்கப்படுவதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ப-11)

## 23 இராணுவ சடலங்களை கடற்படை பொறுப்பேற்றது

23 இராணுவத்தினரின் சடலங்களும் நேற்று முன்தினம் மாலை பருத்தித்துறை நடுக்கடலில் வைத்து கடற்படைக் கப்பலில் ஏற்றப்பட்டன.

யாழ் செஞ்சிலுவைச்சங்கத் தொண்டர்கள் இவற்றைக் கொண்டு சென்று கடற்படையினரிடம் ஒப்படைத்தனர்.

இச்சடலங்கள் அழுகிய நிலையில் இருந்ததால் கடற்படையினர் ஏற்க பின்நின்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப-11, 70)

## யாழ் மாநகரசபைக்கு 18 லட்சம் ரூபாவே வருகிறது

யாழ் மாநகர சபைக்கு மாதாந்தம் 25 லட்சம் ரூபா நடைமுறைச் செலவினங்களுக்காகத் தேவைப்படுகிறது

ஆனால் உள்ளூராட்சி அமைச்சு 18 லட்சம் ரூபாவை மட்டுமே மாதாந்தம் அனுப்புகிறது.

இதனால் ஒய்வூதியம் மற்றும் சம்பளம் போன்றவற்றை முழுமையாக வழங்கமுடியாதுள்ளதாக மாநகர ஆணையாளர் வி. பி. பாலசிங்கம் கவலை தெரிவித்துள்ளார்.

மிகுதிப் பணம் மாநகர வரி, மற்றும் வாடகை மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டே நிரப்பப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார் (ப-11)

---

### வெல்லாவெளி..

தரப்பில 2வது லெப். அஜித் (ரட்ணசிங்கம், ரகுவரன், கல்லடி, மட்டக்களப்பு) வீரமரணத்தை தழுவிக் கொண்டார். (71)

---

### கு. பொ. த.

தோற்றவுள்ளனர்.

வடக்கு கிழக்கு பகுதிகளில்

### நகைவரி நீக்கம்

தமிழீழ மீட்பு நிதிக்கு தமிழீழ மக்கள் பங்களிப்புச் செய்து வருவதால் எம்மால் ஒரு பவுணுக்கு நூறு ரூபா என்ற அடிப்படையில் அறவிடப்பட்ட வரி அறவிடு நீக்கப்பட்டுள்ளதாக நிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

பொதுமக்கள் எவரும் நகை கொள்வனவு செய்யும் போது மேற்படி வரியை செலுத்த

## கீரிமலையில் மூதாட்டிக்கு வீடு பார்க்க அனுமதி

வலித்தூண்டலைச் சேர்ந்த பொன்னி என்ற மூதாட்டி அண்மையில் வீடு பார்க்கச் சென்ற போது அங்கு நிலைகொண்டிருக்கும் இராணுவத்தால் தடுத்து நிறுத்தப்பட்ட போது தான் முல்லைத்தீவிலிருந்து வருவதாகவும் இங்குள்ள பிரச்சினைகள் எதுவும் தெரியாது என்றும் படையினரிடம் கூறினார்.

''எம்மைக் கண்டதும் எல்லோரும் ஓடிவிட்டனர். இங்கு ஒருவருமே இல்லை எனப் பதிலளித்த சிப்பாய்கள் அம்மூதாட்டியை வீடு பார்க்க அனுமதித்தனர்.

இராணுவத்திடம் சிக்கியுள்ள வீமன் நாகன்) என்பவருடன் தான் பேச விரும்புவதாக அம்மூதாட்டி கேட்ட போது அவர் சுகமாக இருப்பதாக பின்னைகளிடம் கூறும்படியும் சொன்னார்களாம். (48)

## மந்திகை ஆஸ்பத்திரியில் 10 சைக்கிள்கள் திருட்டு

மந்திகை அரசினர் வைத்தியசாலைப் பகுதியில் கடந்த ஒரு மாத காலத்தில் வைத்தியசாலைக்கு வந்தவர்களின் பத்து சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

வைத்தியசாலைப் பகுதியில் நடைபெறும் இச்சைக்கிள் திருட்டில் ஒரு கோஷ்டியினர் சந்தர்ப்பம் பார்த்திருந்து தமது கைவரிசையைக் காட்டி வருவதாகவும், இக்கோஷ்டியினரை மடக்கிப்பிடித்து திருட்டைத் தடுப்பதற்கான இரகசிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (15)

## சனசமூக நிலையங்களுக்கு மாநகரசபை நூல் உதவி

யாழ் மாநகரசபை எல்லைக்குள் நூல்நிலையங்களை நடாத்தி வரும் சனசமூக நிலையங்களுக்கு இலவசமாக புத்தகங்கள் வழங்கப்படுமென மாநகர ஆணையாளர் வி. பி. பாலசிங்கம் முரசொலிக்குத் தெரிவித்தார்.

சனசமூக நிலையங்களின் அபிவிருத்திச் செயற்பாட்டுடன் கூடிய நிதிவசதியளிக்கப் படுமெனவும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையில் இச்சனசமூக நிலையங்களுக்கு இந்த உதவி கிடைப்பது பாராட்டத்தக்கது என சனசமூக நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (ப-11

## பாடசாலை மாணவர்

# காலமானார்

## பிரம்மஸ்ரீ சோமசுந்தரஐயர் சாம்பசிவஐயர்

காரைநகர் மேற்கு மணற்காடு முத்துமாரி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ சோமசுந்தரஐயர் சாம்பசிவஐயர் அவர்கள் (03 - 04 - 1991) புதன்கிழமை காலை 7.00 மணியளவில் சிவபதப் பேறு எய்தியுள்ளார். அவர்களது ஈமக்கிரியைகள் ''ஸ்ரீ குகன் மில்'' உடுவில், சுன்னாகத்தில் நடைபெற்றது. இத்தகவலை அனைவர்க்கும் அறிவித்துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்
சிவஸ்ரீ சா. சோமசபேசக் குருக்கள்
(பிரதம சிவாச்சாரியர் அருள்மிகு சிவகாமி அம்மன் தேவஸ்தானம். இணுவில்.)

பிரம்மஸ்ரீ மு. ப. காங்கேயசர்மா
04-04-1991 (ஸ்ரீ குகன் மில் உடுவில், சுன்னாகம்)

04015

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷேர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார்வீதி டச்சு வீதி லஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 04 -04 -1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

வடக்கு கிழக்கு பகுதிகளில் இந்த விசேட பரீட்சை நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பரீட்சை வினாத்தாள்கள் இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் இங்கு வந்து சேர்ந்துவிடும்என எதிர்பார்க்கப்படுகிறது. (74)

## மின்சாரசபை...

விக்கப்படுகிறது.

வடபகுதி மின்சாரசபை ஊழியர் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என்பது பற்றி ஏற்கனவே முரசொலி செய்தி வெளியிட்டு இருந்தமை தெரிந்ததே. (ப-11)

## திருமலை...

இச்சம்பவத்தைத் தொடர்ந்து திருமலையில் உள்ள சிங்கள மீனவர்களிடையே பதற்ற நிலை காணப்படுவதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன

## கீரிமலையில்...

ஷெல்களையும் ஏவினர்.

இவை விழிசிட்டி, பன்னாலைப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. இதனால் இங்குள்ள சில வீடுகள் சேதமடைந்தன. (48)

மேற்படி வரியை செலுத்த வேண்டாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நகை வியாபாரிகள் எவரும் வரி நீக்கத்தைக் கருத்தில் கொண்டு நகை கொள்வனவாளரிடம் வரி அறவிடக்கூடாதெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## கொழும்பு...

வடபகுதியிலிருந்து கொழும்பு பயணிகள் எவரும் செல்லவில்லை என யாழ் போக்குவரத்துப் பகுதியினர் தெரிவித்தனர்.

இதேவேளை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்தவர்களில் சிலர் வவுனியாவில் தரித்து நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (70)

## நீலங்காடு...

டார்- 1,3 அங்குல மோட்டார் ஷெல்- 10, ரி 56 மகஸீன்- 6, புகைக்குண்டு- 2, ஆர். பி ஜி புரொப்பலர்- 2, தொலைத்தொடர்புக் கருவி-3, சப்பாத்துக்கள் 9 சோடி.

மற்றும் பெருந்தொகை ஐ. எம். ரவைகள், கோல்சர், ஹெல்மட்டுக்கள் மீட்கப்பட்டுள்ளன. (ப-31)

# பாடசாலை மாணவர் இரத்ததானம்

யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் நிலவும் இரத்தப்பற்றாக்குறையை நீக்கும் பொருட்டு நேற்றுப்பாடசாலை மாணவர்கள் இரத்ததானம் செய்தனர்.

யாழ் கனகரத்தினம் மகாவித்தியாலயம், வேம்படி மகளிர் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர்மடம், மத்திய கல்லூரி, திருஞானசம்பந்தர் வித்தியாலயம், புனித பத்திரிசியார் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலை மாணவ மாணவிகளே நேற்று இரத்ததானம் செய்தனர். (71)

## சர்வதேசப்பிரிவு கணக்கிலிடுகிறது

இலங்கை வங்கி யாழ்ப்பாணக்கிளையின் சர்வதேசப் பிரிவு தற்போது வெளிநாட்டுக் காசோலைகளைத் தமது வாடிக்கையாளர் கணக்குகளின் வைப்பிற்கு ஏற்று, அவற்றிற்கான பணம் வங்கிக்குக் கிடைத்த பின்னர், அவர்களது கணக்குகளில் வரவிலிடுகின்றது.

## கட்டுத்துவக்கு...

கட்டுத்துவக்கு வெடித்து கையில் பலத்த காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வேட்டைக்குச் சென்ற கட்டுத்துவக்கு தோட்டாவை இடுகையிலே கட்டுத்துவக்கு வெடித்ததாக தெரிவிக்கப்படுகிறது. (74)

## பதவி உயர்வு

வடமராட்சி கோட்டக்கல்வி அலுவலகத்தில் கல்வியதிகாரியாக (தற்காலிக, கடமையாற்றிய எஸ். வேணுகோபால் முல்லைத்தீவு கல்வித் திணைக்களத்தில் கல்வியதிகாரியாகப் பொறுப்பேற்றுள்ளார்பருத்தித்துறைமெதடிஸ்த பெண்கள் உயர் தரக்கல்லூரியில் ஆசிரியராகக்கடமையாற்றிய வேணுகோபால் அண்மையில் கல்வியமைச்சால் பதவி உயர்த்தப்பட்டு கல்வியதிகாரியாக நியமிக்கப்பட்டவராவர். (15)